OS.No.361/2023 – 14.08.2025

PW2 – பெரியசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி மாசிலாமணி எனக்கு எப்படி பழக்கம் என்றால் வேம்படிதாளத்தில் குடியிருக்கும்போது பழக்கம். அவர் என் மாமனாருக்கு நெருக்கம், அந்த வகையில் அவர் எனக்கு பழக்கம். பிரதிவாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் மர வியாபாரம் மூலம் எனக்கு பழக்கம். அவரை எத்தனை வருடமாக பழக்கம் என்றால் 10 வருடமாக பழக்கம். பிரதிவாதி எங்கே குடியிருக்கிறார் என்றால் வாழவந்தி கீரக்காட்டில் குடியிருக்கிறார். பிரதிவாதியின் குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்றால் இவரோடு மொத்தம் 4 பேர்கள்.

புரோநோட்டை பூர்த்தி செய்ய யார் என்னை அழைத்தார்கள் என்றால் சந்திரன்தான் அழைத்து சென்றார். இந்த விசயத்தை நான்எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. புரோநோட்டை எங்கே வைத்து பூர்த்தி செய்தேன் என்றால் வாதியின் வீட்டில் வைத்து பூர்த்தி செய்தேன். இந்த விசயத்தையும் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. வாதியும் பிரதிவாதியும் எனக்கு எப்படி பழக்கம் என்று எனது நிரூபண

வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. புரோநோட்டை பூர்த்தி செய்த பிறகுதான் பிரதிவாதி கையெழுத்து செய்தார். எந்த தேதியில் புரோநோட்டை பூர்த்தி செய்தேன் என்றால் 18.03.2021 ம் தேதி வியாழக்கிழமை காலை 10,11 மணிக்கு பூர்த்தி செய்தேன்.

புரோநோட்டை பூர்த்தி செய்தபோது கோவிந்தராஜ் அருகில் இருந்தாரா என்றால் இல்லை. அப்போதே வாதி ரூ.10,00,000/-ஐ கொடுத்தாரா என்றால் கொடுத்தார். பணமாக கொடுத்தாரா அல்லது டீடீ-யாக கொடுத்தாரா என்றால் பணமாக கொடுத்தார்.

வாதி என்னை ஏற்கனவே தெரியாது என்று சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். ஏற்காட்டை சார்ந்த. கோவிந்தராஜ் என்பவரிடம் வாதி மாசிலாமணி ரூ.40,00,000/- ஏமார்ந்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மாசிலாமணி சேலம் நீதிமன்றத்தில் 4, 5 வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த வழக்குகளில் நான் சாட்சியா என்றால் இல்லை.

வா.சா.ஆ.1 புரோநோட்டில் ரேகைக்கு அருகில் கீரல் என்று எந்த பெயரும் எழுதாமல் உள்ளது என்றால் சரிதான். புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதி சந்திரனின் கையெழுத்து இல்லை என்றும் அதை நான்தான் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள ரேகையும் பிரதிவாதியின் ரேகை இல்லை என்றால் சரியல்ல. அந்த ரேகையை நானே போட்டுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

ரேகையும் கையெழுத்தும் நான்தான் பிரதிவாதியிடம் வாங்கினேன்.

புரோநோட்டை நானாக பூர்த்தி செய்து நானாகவே கையொப்பம் மற்றும் ரேகையை வைத்துக்கொண்டேன் என்றும் இந்த வழக்கிற்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஏற்கனவே பிரதிவாதி, கோவிந்தராஜ் என்பவரிடம் ரூ.1,00,000/- கடனாக வாங்கியிருந்தார் என்றும் அதற்காக வீட்டு பத்திரத்தின் ஜெராக்ஸ் நகலையும் சில ஆவணங்களையும் கோவிந்தராஜிடம் கொடுத்திருந்தார் என்றும் அந்த கோவிந்தராஜ் மாசிலாமணியிடம் ரூ.40,00,000/- ஏமாற்றியிருந்தார் என்றும், அந்த பணத்தை ஈடு செய்வதற்காக அந்த ஆவணங்களை மாசிலாமணியிடம் கொடுத்து பிரதிவாதியிடம் எவ்வளவு வேண்டுமானாலும் வசூல் செய்து கொள்ளுங்கள் என்று கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வாதியிடம் எந்த ஒரு கடனும் வாங்கவில்லை என்றும் பிரதிவாதி எந்த ஒரு புரோநோட்டும் எழுதி தரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியை 10 வருடமாக எனக்கு தெரியும் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு சாதகமாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.